# அரங்கக் கலையும் ஆளுமை வளர்ச்சியும்

# (Development through Theatre)

இப்பாடம் 'கலை வழி வளர்ச்சி'**(Development through Arts)** எனும் கருத்தியலின் அடிப்படையில் வடிவமைக்கப்பட்டதாகும். கிராமப்புறங்களிலிருந்தும் முதல் தலைமுறையாகவும் உயர்கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ள நிலையில் மாணவர்களின் சமூகத் திறன்களை **(Social Skills)** மேம்படுத்த வேண்டிய தேவையோடு அவர்களின் உள்ளார்ந்த வளர்ச்சி**(Inner growth),** படைப்பாற்றல்**(Creativity)** ஆகியனவற்றைக் கூர்மைப்படுத்த வேண்டிய தேவை கல்வி நிறுவனங்களுக்கு உண்டு. அந்த அடிப்படையில் நாடகத்தில் நடிகனுக்குப் பரிந்துரைக்கப்படும் பயிற்சிகளை வழங்குவதன் மூலமாக அவர்களின் செயல்திறனை மேம்படுத்துவதாக இப்பாடம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

வகுப்பறை நிகழ்வுகளோடு மூன்று நாள் பயிலரங்கம் ஒன்றில் பங்கேற்பது இப்பாடத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மூன்று இரவுகள் மூன்று பகல்கள் என நீளும் இப்பயிலரங்கில் சிறப்பு பயிற்றுநர்கள் அழைக்கப்பட்டு பயிற்சி அளித்து வருகின்றனர். இப்பயிலரங்கு மாணவர் தம்மை உள்முகமாக அறிந்துகொள்ளவும், தம் போதாமைகளை இனம்கண்டு, படைப்பாற்றலையும் ஆளுமையையும் வளர்த்துக்கொள்ள ஏதுவாக இருப்பதாக மாணவர்கள் எதிர்வினையாற்றியுள்ளனர். கடந்த 10 ஆண்டுகளாக இப்பயிலரங்கத்தின் பயிற்றுநர்களாகக் கலந்து கொண்டு பங்களித்தவர்கள்

**திரு. மு.இராமசாமி, மேனாள் துறைத்தலைவர், நாடகத்துறை, தஞ்சை**

**திரு. சண்முகராஜன், தேசிய நாடகப்பள்ளி முன்னாள் மாணவர்**

**திரு. அனிஷ், திரைப்பட, நாடக இயக்குநர், பாண்டிச்சேரி பல்கலைக்கழக முன்னாள் மாணவர், ஆசிரியர்.**

**திரு. ராஜேஷ், தேசிய நாடகப்பள்ளி முன்னாள் மாணவர்**

**திரு. திருநாவுக்கரசு, தேசிய நாடகப்பள்ளி முன்னாள் மாணவர்**

**திரு. வடிவேல், நிகழ்கலைத்துறை முன்னாள் மாணவர், பாண்டிச்சேரி பல்கலைக்கழகம்**

**திரு. ஆனந்த், பெங்களூர் தேசிய நாடகப்பள்ளி முன்னாள் மாணவர்**

**திரு. பூமிநாதன், புதுதில்லி தேசிய நாடகப்பள்ளி முன்னாள் மாணவர**

# 3 Day Residential Workshop on Development through Theatre

**For post - graduate students (CBCS) at Sacred Heart College, Kodaikanal.**

**2016 March 07-09**







